I Additional District Court, Thoothukudi.

<u>O.S.No.127/2021 நாள் : 16.10.2025 பி.சா.1– திரு. முத்துப்பாண்டி.</u>

**குறுக்கு விசாரணை :–**

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாயம், பால் வியாபாரம் செய்கிறேன். மரம் வாங்கி வியாபாரிகளுக்கும் கொடுப்பேன். வாதிகளை எனக்குத் தெரியாது. எனக்கு மூன்று பிள்ளைகள். இரண்டு ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தை உள்ளன. வா.சா.ஆ1ல் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் என்னால் உறுதியாக சொல்லமுடியாது. வா.சா.ஆ1க்கு பிறகுதான் என் மகளுக்கு திருமணமானது என்றால் அதற்கு முன்பே திருமணமாகிவிட்டது. எதிர் வழக்குரையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வாதிகள் குறித்த வகை நிறைவேற்றத்திற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். வக்காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு விபரங்கள் சொன்னது நான்தான். எதிர் வழக்குரையில் வா.சா.ஆ1ல் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என்று நான் சொல்லியுள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம்தான் கேட்க வேண்டும். கிரைய ஒப்பந்தம் எழுதும்போது கையிருப்பாக எவ்வளவு சொத்து வைத்திருந்தேன் என்றால் நான் கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கவில்லை. வா.சா.ஆ1 ஒப்பந்தத்தை நான் தற்போதுதான் முதன் முதலில் பார்க்கிறேன். இதற்கு முன்பு பார்த்ததில்லை. வா.சா.ஆ1–ஐ பார்ப்பதற்காக வழக்கறிஞர் மூலமாக நான் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும்போது வா.சா.ஆ1 அசலில் உள்ள கையொப்பம் உண்மையா, பொய்யா என்பது எனக்குத் தெரியாது. அசலை பார்க்காமல் எப்படி கையெழுத்து பற்றி உறுதியாக சொல்லமுடியாது என்று எதிர் வழக்குரையில் சொன்னேன் என்றால்

ஒளிநகலை வைத்து சொன்னேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் பாட்டனார் என் தாயாருக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் நகல் என்றால் சரிதான். அந்த பத்திரம் **வா.சா.ஆ 17**. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தாவா சொத்துக்களுக்கான வில்லங்கச் சான்றிதழ் என்றால் எனக்கு சரியாகத் தெரியவில்லை. அந்த ஆவணத்தில் புல எண், உரிமையாளர் பெயர், ஆவணம், சொத்தை வாங்கியவர் பெயர் ஆகியவை இருப்பது எனக்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாகத் தெரியவில்லை. 2002–ல் நேஷனல் பொறியியல் கல்லூரி உரிமையாளர் கே.ராமசாமி மற்றும் அவரது மகன் அருணாசலம் பெயரில் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.121/2002 தாக்கல் செய்தேன் என்றால் அதற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்பதால் என்னால் பதில் சொல்லமுடியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் அரசு வழக்கறிஞர் திரு.கே.சந்திரசேகரன் என்பவரிடம் பெற்ற சட்ட கருத்துரை என்றால் அதை நான் வாங்கவில்லை. வா.சா.ஆ 2 சட்ட அறிவிப்பு நான் விபரம் சொல்லித்தான் வழக்கறிஞர் அனுப்பினார் என்றால் சரிதான். அதை 1ம் வாதிக்கு அனுப்பினேன். வா.சா.ஆ 2 ல் நான் எவ்வளவு கடன் வாங்கினேன் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின் படி வாதி ரூபாய் 2,00,99,999/– தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. வாதிக்கு அவ்வளவு வசதியில்லை என்று எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன். அந்த பணத்தை வாதி 2022 லேயே நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துவிட்டார் என்றால் அது தற்போதுதான் எனக்குத் தெரியும். எதிர் வழக்குரையில் எதற்காக கடன் வாங்கினேன் என்றும், எவ்வளவு கடன் வாங்கினேன் என்றும், என்ன வட்டிக்கு வாங்கினேன் என்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

வாதியிடம் பிணையமாக பத்திரம் எதுவும் கொடுக்கவில்லை. தாவா சொத்தை எத்தனை முறை அளந்தேன் என்றால் அளக்கவே இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் வாதியிடம் கொடுத்த புல வரைபட நகல் என்றால் நான் கொடுக்கவில்லை. நான் வாதியிடம் பெற்ற கடன் ரூ. 3 லட்சத்தை திருப்பி கொடுக்கவில்லை. கொரோனா காலத்தில் என்னால் கடனை திருப்பி கொடுக்கமுடியவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்துவிட்டார்கள். வா.சா.ஆ1ல் உள்ள சாட்சி கையொப்பம் என் மகன் மனோராகேஷ் உடையது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் என் மகன் கையெழுத்தா என்பது சந்தேகமாக உள்ளது என்று கூறுகிறார். வா.சா.ஆ1ல் முதல் தாளின் பின்பகுதியில் உள்ள கையொப்பங்கள் என் கையொப்பம் மற்றும் என் மகனின் கையொப்பம். அதை வெற்றுத்தாளில்தான் எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். வா.சா.ஆ1 செல்லாது என்று நான் எதிர் கோரிக்கை கேட்கவில்லை என்றால் நான் தற்போதுதான் வந்துள்ளேன். வாதியிடம் நான் ரூபாய் 3 லட்சம் கடன் வாங்கியதாக காட்ட ஆவணமில்லை. வெற்றுத்தாளில்தான் என் மகனிடமும் வாதி கையொப்பம் பெற்றுக் கொண்டதாக எதிர் வழக்குரையில் சொன்னேனா என்றால் வழக்கறிஞரிடம் சொன்னேன். தாவா சொத்தின் தென்புறமாக ஓடை உள்ளது. தாவா சொத்தில் தென்மேற்கு மூலையில் 25 செண்ட்டை எனக்கு ஒதுக்கி வா.சா.ஆ1 பத்திரம் எழுதப்பட்டது என்றால் வா.சா.ஆ1–ஐ நான் எழுதிக் கொடுக்கவில்லை. ஒரு பாதையை ஏற்படுத்துவதற்காகத்தான் 25 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ1 ஒப்பந்தத்தை சரியான பிரதிபலனுக்காக நான் வாதிக்கு எழுதிக் கொடுத்துவிட்டு வாதியை ஏமாற்றுவதற்காக பொய்யான எதிர் வழக்காடுகின்றேன் என்றால் சரியல்ல. வாதி வசதியான நபர் என்று காட்டுவதற்காக போதுமான ஆவணங்களை

தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்குத் தெரியாது. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.10.16 17:47:34 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.